# அணுகுவோம்! ஆராய்வோம்!!
# தெளிவோம்!!! தேர்வோம்!!!!

**“(சாந்தி) மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை. வழிகேட்டிலிருந்து வழிபாடு (நேர்வழி) முற்றிலும் (பிரிந்து) தெளிவாகிவிட்டது. ஆகவே எவன் ஷைத்தானை நிராகரித்து விட்டு, அல்லாஹ்வை விசுவாசிக்கிறானோ அவன், நிச்சயமாக அறுபடாத பலமானதொரு கயிற்றைப் பிடித்துக் கொண்டான்.”** *அல்குர்ஆன் 2:256*

**“அல்லாஹ்வின்பால் (மக்களை) அழைத்துக்கொண்டு, தானும் நல்லமல்கள் செய்துகொண்டு, நானும் முஸ்லிம்களில் ஒருவன் என்பவனைவிட அழகிய சொல் சொல்லுபவன் யார்?”** *அல்குர்ஆன் 41:33*

**“என்னைப் பற்றி ஒரு விஷயம் தெரிந்தாலும், அதைப் பிறருக்குச் சொல்லிவிடுங்கள்”**

*நூல்கள் : புகாரி, திர்மிதி*

**மார்க்கப் புறம்பான செயல் நடக்கக் கண்டால், முடிந்தால் கைகளால் தடுங்கள், முடியாவிட்டால் நாவினால் தடுங்கள், அதுவும் முடியாவிட்டால் உள்ளத்தால் வருந்துங்கள். இது ஈமானின் கடைசி நிலையாகும்.**

*நூல்கள் : முஸ்லிம், முஅத்தா, அபூதாவூது, திர்மிதி, நஸயி*

அன்புச் சகோதரர்களே!

மேலேயுள்ள குர்ஆன் நபி மொழிகளுக்கிணங்கச் செயல்பட்டு வருகிறோம். பல சகோதரர்கள் பங்கு பெற்றுப் பயனடைகின்றனர். சந்தா இல்லை; கட்டணம் இல்லை; கட்டுப்பாடும் இல்லை. யாரும் வந்து தங்கள் எண்ணங்களை வெளியிடலாம். பொதுவாக எந்த ஒரு இயக்கமும், தங்களுக்கென்று விதிகள் அமைத்துக் கொண்டு, அதற்கிசைய மட்டுமே பேச அனுமதிப்பார்கள். அவர்களைப் பற்றி விமர்சிப்பதை அனுமதிக்க மாட்டார்கள். இந்தப் பொது விதிக்கு மாறாக நாங்கள் நடத்தி வருகிறோம். எங்கள் மேடையிலேயே எங்களை விமர்சிக்

கலாம். காரணம் எங்களுக்கென்று ஒரு இயக்கமில்லை; ஒரு கொள்கை இல்லை, ஒரு திட்டமில்லை. அல்லாஹ் குர்ஆனில் சொல்வதுதான் எங்கள் கொள்கை; நபி(ஸல்) அமுல்படுத்திக் காட்டியதுதான் எங்கள் திட்டம்; 'இஸ்லாம்' தான் எங்கள் இயக்கம். அதன்படி நடப்பதுதான் எங்கள் நோக்கம், மாறாத குறிக்கோள்.

குர்ஆனுக்கும், ஹதீஸ்களுக்கும் மாற்றமாக, எங்களிடம் எது இருந்தாலும், அதை யார் சுட்டிக்காட்டினாலும், மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வோம். அவர்களுக்குக் கோடி, கோடி நன்றி செலுத்துவோம். நாங்கள் எதிர்ப்பதெல்லாம், ஒழிக்க விரும்புவதெல்லாம் இஸ்லாத்தின் பெயரால் குர்ஆனுக்கும், ஹதீஸ்களுக்கும், மாறாகச் சமூகத்தில் நுழைந்துள்ள மூடக்கொள்கைகள், குருட்டுச் சடங்குகள் ஆகியவற்றை மட்டுமேயாகும்.

ஆகவே எங்களைப்பற்றி விமர்சிப்பவர்கள், தங்களின் சொல்லின் உண்மை இருந்தால், தாராளமாக எங்கள் மேடைக்கு வரலாம். அவர்களை வருக வருக என்று இருகைகள் நீட்டி, வரவேற்கக் காத்திருக்கிறோம். மரியாதையோடு, கண்ணியமும் காக்கிறோம். அவர்களின் உரைக்குப் பின் எங்களின் நியாயமான கேள்விகளுக்குக் குர்ஆன், ஹதீஸ்கள் கொண்டு விளக்கம் தரட்டும். இல்லையேல் மரியாதை, கண்ணியம் காக்க அவர்கள் முன்வந்தால், அவர்கள் இடத்திற்கே நாங்கள் போய் சேர்ந்து, எங்கள் ஐயங்களைக் கேட்கிறோம். விளக்கம் தரட்டும். இதற்கும் விருப்பமில்லை என்றால், அவர்களது விளக்கங்களை, ஐயங்களைக் கடிதங்கள் மூலம் அறிவிக்கட்டும். இஸ்லாத்திற்கு உள்ளே இருந்தால் ஏற்றுக் கொள்கிறோம். இல்லை என்றால் அதற்குக் குர்ஆன், ஹதீஸ்கள் கொண்டே சான்று தருகிறோம்.

**அவர்கள் சொல்லைச் செவியுற்று, அதிலுள்ள நல்லவைகளைப் பின்பற்றியும் நடக்கின்றனர்; நிச்சயமாக அல்லாஹ் நேரான பாதையில் செலுத்துவது, இத்தகையோரைத்தான்; இவர்கள்தான் அறிவுடையோராவார்கள். இவர்களே நற்செய்திக்கு உரியவர்கள்.** அல்குர்ஆன் **39:17,18**

சொல்லும் கருத்தைக் கவனி; சொல்லுபவர் யார்?

என்று கவனிக்காதே. அலீ(ரழி) **வேண்டாம் ஷைத்தான் வேலை**; இதை விட்டு, மக்களே அங்குப் போகாதீர்கள், அவர்கள் இமாம்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள்; வஹ்ஹாபிகள்; உங்களை வழிகெடுத்து விடுவார்கள் என்று பூச்சாண்டி காட்ட வேண்டாம். எங்கள் செயல் 'இஸ்லாத்திற்கு முரண்பட்டு இருந்தால் எங்களைத் திருத்துவது உங்கள் கடமை. அதைவிட்டுச் செய்யும் இந்தச் செயல், ஆலிம்களுக்கென்ன, முஸ்லிம்களுக்கே அழகல்ல, ஷைத்தானின் செயல். "**நீங்கள் இந்த குர்ஆனைக் கேட்காதீர்கள் (அது ஓதப்படும்போது) அதில் (குழப்பம் செய்து) கூச்சலிடுங்கள்.**" (41:26) என்று கூறியது காஃபிர்கள்தான்.

"**முஹம்மதை நெருங்காதீர்கள், காதில் பஞ்சை வைத்துக்கொள்ளுங்கள்**" என்று கூறியதும் காஃபிர்கள் தான். நபி(ஸல்) அவர்கள், அபூஜஹ்ல், அபூலஹபிடம் போக வேண்டாம், அவர்கள் பேச்சைக் கேட்க வேண்டாம், என்று சொன்னதாக வரலாறு இல்லை.

உலகத் தொடக்கத்திலிருந்தே, மதங்களை வைத்து வயிறு வளர்ப்பவர்கள், உண்மையாக மார்க்கத்தை மக்கள் விளங்குவதைத் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். உலகம் அழியும் வரைத் தடுத்துக் கொண்டிருப்பார்கள். காரணம், மார்க்கம் விஷயத்தில் மக்களை அறியாமையில் வைப்பதில் தான் அவர்களின் ஆதாயமும், பிழைப்பும் இருக்கின்றன.

முஸ்லிம்களில் யாரும், அந்தப் பிற்போக்குக் கூட் டத்தில் சேர வேண்டாம். உலக ஆதாயத்திற்காக, மார்க்கத்தை விற்கும் '**தீய ஆலிம்**'களாக, ஆகாதீர்கள், என்று ஆலிம்களைக் கேட்டுக் கொள்கிறோம். முஸ்லிம்களே, நீங்கள் நினைப்பது போல் '**இஸ்லாம்**' உங்களால் புரிய முடியாததல்ல. குர்ஆனையும், ஹதீஸ் களையும் எல்லோரும் விளங்க முடியாது என்பது உண்மை யானால், அதன்படி நடக்கும்படியான, அல்லாஹ்வின் கட் டளையே நியாயமற்றதாகிவிடும். "**மக்களுக்குகாகக் குர்ஆனை எளிதாக்கி இருக்கிறோம்**" (54:16) என்றே அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான். அல்லாஹ்

எளிதாக்கித் தந்த **'இஸ்லாத்தை'** வஹீ முற்றுப் பெற்றுச் சுமார் 400 ஆண்டுகளுக்குப்பின் தோன்றிய சில சுய நலமிகள் கடினமாக ஆக்கிவிட்டார்கள். வாருங்கள் ஆதாரங்கள் பல அள்ளி, அள்ளித் தருகிறோம். கடை பிடிக்க எளிதான அல்லாஹ்வால் கொடுக்கப்பட்ட கலப்பற்ற **'இஸ்லாம்'** மார்க்கத்தை அறிந்து கொள்ள, ஞாயிறுதோறும் வாருங்கள். அணுகுவோம்! ஆராய்வோம்!! தெளிவோம்!!! தேர்வோம்!!!!

வெளியீடு : 7 தேதி 1.3.1985